**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.224/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | பிரேமா |
| Father's Name/Husband Name: | | தங்கராசு |
| Village | : | திருமாந்துரை |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் என் வீட்டிற்கு எதிர் புறமாக குடியிருந்து வருகிறார்கள். எதிரிகள் என்னை பார்த்தால் அடிக்கடி எச்சியை துப்பி அசிங்கப்படுத்தி கொண்டு இருப்பார்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் என்னுடைய மகளை கல்லூரி செல்வதற்காக கொண்டு போய் விட்டுவிட்டு வீட்டிற்கு வரும்போது எதிரி சக்திவேல் என்னை பார்த்து எச்சியை துப்பினார். மீண்டும் மாலை 05.00 மணியளவில் எனது மகளை செல்வகுமாரியை அழைத்துக் கொண்டு வரும்போது மீண்டும் எதிரி எங்கள் இருவரையும் பார்த்து எச்சியை துப்பினார்.

நான் எதிரிகளிடம் எதற்காக இப்படி செய்கிறாய் என்றுகேட்டேன். அதற்கு எதிரி சக்திவேல் அப்படிதான்டி தேவடியா செய்வேன் என்று சொன்னார். சம்பவயிடத்திற்கு வந்த எதிரி ரேவதி கட்டையை எடுத்து எனது மகளின் இடது காலிலும்,

தாவாக்கட்டையிலும் அடித்தார். எதற்காக இப்படி அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, என்னையும் கீழே தள்ளி சக்திவேல். என்னுடைய முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி என்மீது உட்கார்ந்து எனது வலது கையில் கடித்து விட்டார், பிறகு அருவாளை எடுத்துவந்து உங்களை என்னைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்.

வலி தாங்க முடியாமல் நான் கத்தியவுடன் அருகிலிருந்த நேசமணி, காசிநாதன் மற்றும் சிலர் ஓடி வந்து எங்களை தூக்கி விட்டார்கள். அதன்பிறகு எனது மகனுக்கு தகவல் தெரிந்து அவர் வந்து என்னையும், எனது மகள் செல்வக்குமாரியையும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். மருத்துவமனை வந்த போலிசார என்னையும் எனது மகளையும் விசாரித்துவிட்டு என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தை எழுதிய பிறகு போலிசார் படித்துக் காண்பித்தார்கள். நான் அதில் கையெழுத்து செய்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் எனது எதிர் வீடு என்பதால் அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.